06.10.2021

**MCOP No**. 2283/2017

**மனுதாரர் தரப்பு சாட்சி - 2-ஜோதிமணி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. விபத்தில் இறந்த ஜீவானந்தம் என் தூரத்து உறவினர். சம்பவ நடந்த ரோடு மேலூர் -மதுரை கிழமேல் ரோடு ஆகும். சம்பவம் மேலூர் யூனியன் ஆபிஸ் முன்பு தான் நடந்தது. TN59 BZ 2295 என்ற வண்டியில் 7.9.2012 அன்று நான் இறந்து போன ஜீவானந்தம் வண்டியை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து வந்தேன். விபத்து சமயத்தில் நானும், இறந்து போன ஜீவானந்தமும் தலைகவசம் எதுவும் அணியவில்லை. நாங்கள் சம்பவத்தன்று கிழக்கிலிருந்து மேற்காக சென்றோம். சம்பவத்தன்று TN59 BZ 6262 என்ற தனியார் பேருந்து யூனியன் ஆபிஸ் பஸ் நிறுத்ததில் நின்றிருந்தது. எனக்கு முன்னால் மேலூர்-மதுரை சென்ற தனியார் பேருந்தினை முந்தி செல்ல முயன்று தனியார் பேருந்தின் பின்பக்கத்தில் வலது பக்கத்தில் மோதி சாலையின் வலது பக்கத்தில் நிலை தடுமாறி கீழே விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னாலும், அந்த சமயத்தில் வலது பக்கத்தில் மதுரையிலிருந்து மேலூர் நோக்கி சென்ற அரசு விரைவு பேருந்தில் விழுந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால், சரியல்ல. விபத்தில் இறந்தவர் நிலைதடுமாறி வலது பக்கம் தான் விழுந்தார் என்றாலும், இந்த வழக்கிற்காக இடது பக்கம் விழுந்தார் என்று சொல்கிறேன் என்றால், சரியல்ல. விபத்து சாலையின் மைய பகுதியில் தான் நடந்தது. விபத்திற்கு இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற ஜீவானந்தம் தான் முழுக்காரணம் என்றாலும், எதிர்மனுதாரர்களின் ஓட்டுனரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும் காரணமல்ல என்று சொன்னால், சரியல்ல. விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்து சென்றிருந்தால் விபத்தை தடுத்திருக்கலாம் என்றாலும், விபத்திற்கு எங்கள் கவனக்குறைவு தான் காரணம் என்று சொன்னால், சரியல்ல. இறந்து போன ஜீவானந்தத்தின் உறவினர் முத்துராமன் என்பவர் தலைமை காவலராக மேலூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றாலும், அவரின் துணைக்கொண்டு தான் இந்த எதிர்மனுதாரர் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இந்த இழப்பீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. விபத்திற்கு எதிர்மனுதாரரின் ஓட்டுனரின் கவனக்குறைவு காரணமல்ல என்றாலும்,

எனவே எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால், சரியல்ல.